பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

26 04 2024 **FRIDAY** 7 15 **AM**

வணக்கம். ஆகாஷ்வாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. மக்களவைக்கு இரண்டாம் கட்ட தேர்தலுக்கான வாக்குப்பதிவு 88 தொகுதிகளில் சற்றுமுன் தொடங்கியது.

2. நான்காம் கட்ட தேர்தலுக்கு தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை இன்று நடைபெறுகிறது.

3. ஈரான் கைப்பற்றிய கப்பலில் சிக்கியுள்ள 16 இந்தியர்கள் சில சட்ட நடைமுறைகளுக்குப் பிறகு விரைவில் தாயகம் திரும்புவார்கள் என்று வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

4. தில்லி மாநகராட்சிக்கான மேயர் மற்றும் துணை மேயர் தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

5. அமெரிக்காவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் அர்ஜூன் கதே - ஜீவன் நெடுஞ்செழியன் இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

>>>><<<<

மக்களவைக்கு இரண்டாம் கட்ட தேர்தலுக்கான வாக்குப்பதிவு 88 தொகுதிகளில் சற்றுமுன் தொடங்கியது.

கேரளாவில் 20, கர்நாடகாவில் 14, ராஜஸ்தானில் 13, உத்தரபிரதேசம், மஹாராஷ்ட்ராவில் தலா 8, மத்தியப்பிரதேசத்தில் 6, அஸ்ஸாம் மற்றும் பீகாரில் தலா 5, மேற்குவங்கம், சத்திஷ்கரில் தலா 3, மணிப்பூர், திரிபுரா, ஜம்மு காஷ்மீரில் தலா ஒரு தொகுதிகளில் தேர்தல் நடைபெற்று வருகிறது.

வாக்குப்பதிவு காலை 7 மணிக்கு தொடங்கி, மாலை 6 மணிவரை நடைபெறவுள்ளது.

இதற்காக மொத்தம் 1 லட்சத்து 67 ஆயிரம் வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

தேர்தல் பணியில் 16 லட்சத்திற்கும் மேற்பட்ட அதிகாரிகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

15 கோடியே 88 லட்சம் வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

இவர்களில் 34 லட்சத்து 8 ஆயிரம் பேர் முதல்முறையாக வாக்களிக்கவுள்ளனர்.

ஆயிரத்து 202 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

கேரளாவில் 20 மக்களவை தொகுதிகளுக்கு ஒரே கட்டமாக நடைபெறும் தேர்தலில் 194 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

அம்மாநிலத்தில் மட்டும் 25 ஆயிரத்து 358 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

2 கோடியே 77 லட்சம் பேர் வாக்களிக்க தகுதிபெற்றுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாக்காளர் அடையாள அட்டை இல்லாதவர்கள், தேர்தல் ஆணையம் அறிவித்துள்ள 12 மாற்று ஆவணங்களை காண்பித்து வாக்களிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்தியப்பிரதேசத்தில் பெதுல் தொகுதியின் பகுஜன் சமாஜ் வேட்பாளர் காலமானதால், அத்தொகுதிக்கான வாக்குப்பதிவு, 3வது கட்ட தேர்தலின் போது நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கர்நாடகாவில் தேர்தல் நடைபெறும் 14 தொகுதிகளில் மாற்றுத் திறனாளி வாக்காளர்களுக்கான சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அங்கு, வாக்குச்சாவடிகளில் சக்கர நாற்காலிகளை பயன்படுத்த, 756 வாக்காளர்களும், அரசு போக்குவரத்து வசதியை பயன்படுத்த 489 வாக்காளர்களும் பதிவு செய்துள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

மேலும் இதற்கான வசதியை பயன்படுத்த விரும்புவோர் **Saksham** செயலியில் இன்று மாலை 5 மணிவரை பதிவு செய்யலாம் என்று கூறியுள்ளது.

இதற்கிடையே, நான்காம் கட்ட தேர்தலுக்கு தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை இன்று நடைபெறுகிறது.

வேட்புமனுக்களை திரும்பப் பெற இம்மாம் 29ஆம் தேதி கடைசி நாள் ஆகும்.

9 மாநிலங்கள் மற்றும் ஒரு யூனியன் பிரதேசத்தில் இடம்பெற்றுள்ள 96 தொகுதிகளில் அடுத்த மாதம் 13ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

இதற்கான தேர்தல் பிரச்சாரம் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், மஹாராஷ்ட்ராவில் தேர்தல் நடைபெறும் 11 தொகுதிகளில் 447 வேட்பாளர்கள் மனுதாக்கல் செய்துள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

**>>>><<<<**

மக்களவை தேர்தலை ஒட்டி, திரு. உத்தவ் தாக்கரே தலைமையிலான சிவசேனா கட்சி தேர்தல் அறிக்கையை வெளியிட்டுள்ளது.

மும்பையில் நடைபெற்ற இதற்கான நிகழ்ச்சியில், அக்கட்சியின் தலைவர் திரு. உத்தவ் தாக்கரே கலந்து கொண்டு, தேர்தல் அறிக்கையை வெளியிட்டார்.

வேலைவாய்ப்பு, விவசாயிகள் நலன் போன்றவற்றில் முக்கிய கவனம் செலுத்தப்படும் என்றும் தேர்தல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திரு. உத்தவ் தாக்ரே, மாவட்ட அளவில் கிராமப்புற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள் உறுதி செய்யப்படுவது தேர்தல் அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாகவும், இதன்மூலம் அவர்கள் பணிக்காக பிற பகுதிகளுக்கு இடம்பெயர்வது தவிர்க்கப்படும் என்று தெரிவித்தார்.

**>>>><<<<**

தில்லி மாநகராட்சிக்கான மேயர் மற்றும் துணை மேயர் தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக மாநகராட்சி செயலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கான தேர்தல் இன்று நடைபெறவிருந்த நிலையில், தேர்தல் அதிகாரி நியமனத்தில் தாமதம் ஏற்பட்டதால், இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

**>>>><<<<**

பிரதமர் திரு. நரேந்திர மோடி, இத்தாலி பிரதமர் திருமதி **Giorgia Meloni-**யுடன் நேற்று தொலைபேசி வாயிலாக உரையாடினார்.

அப்போது, ஜூன் மாதம் இத்தாலியில் நடைபெறவுள்ள ஜி.7 மாநாட்டில் கலந்து கொள்ள தமக்கு அழைப்பு விடுத்துள்ளதற்கு, அவர் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

இதுகுறித்து சமூகவலைதளத்தில் பிரதமர் வெளியிட்டுள்ள பதிவில், இந்தியாவில் நடைபெற்ற ஜி.20 மாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட முடிவுகளை ஜி.7 மாநாட்டின் போது முன்னெடுத்துச் செல்வது குறித்து தாங்கள் விவாதித்ததாக குறிப்பிட்டுள்ளார்.

இத்தாலியின் விடுதலை தினத்தை ஒட்டி, அந்நாட்டு மக்களுக்கு திரு. நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

**>>>><<<<**

அறக்கட்டளைகள் மற்றும் கல்வி நிறுவனங்கள், 10-**A**, 10-**AB** படிவங்களை சமர்பிப்பதற்கான காலக்கெடு ஜூன் மாதம் 30ஆம் தேதிவரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து மத்திய நேரடி வரிகள் வாரியம் வெளியிட்டுள்ள அறிக்கையில், கடந்த 2022-23ஆம் நிதியாண்டுக்கான 10-**A** படிவத்தை தாக்கல் செய்ய தவறியவர்கள் 10-**AC** படிவத்தை தாக்கல் செய்யலாம் என்று கூறப்பட்டுள்ளது.

இதுகுறித்த விவரங்களை **www.incometaxindia.gov.in** என்ற இணையதளத்தில் தெரிந்து கொள்ளலாம் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**>>>><<<<**

ஈரான் கைப்பற்றிய கப்பலில் சிக்கியுள்ள 16 இந்தியர்கள் சில சட்ட நடைமுறைகளுக்குப் பிறகு விரைவில் தாயகம் திரும்புவார்கள் என்று வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய செய்தி தொடர்பாளர் திரு. ரன்தீர் ஜெய்ஸ்வால், 16 பேருக்கு இந்திய தூதரகத்தின் உதவி அளிக்கப்பட்டு வருவதாகவும், அவர்கள் ஆரோக்கியத்துடன் இருப்பதாகவும் கூறினார்.

குடும்பத்தினருடன் அவர்கள் தொடர்பில் இருப்பதாகவும் திரு. ரன்தீர் ஜெய்ஸ்வால் தெரிவித்தார்.

இதற்கிடையே, ரஷ்யாவில் சிக்கியுள்ள இந்தியர்களை மீட்பதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

இதுதொடர்பாக, ரஷ்ய வெளியுறவு அமைச்சகம், பாதுகாப்பு அமைச்சகம் மற்றும் இதர அமைப்புகளுடன் பேச்சுக்கள் நடத்தப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

ஏற்கனவே 10 இந்தியர்கள் தாயகம் திரும்பியுள்ள நிலையில், எஞ்சியவர்களும் விரைவில் இந்தியாவிற்கு அனுப்பப்படுவார்கள் என்று ரஷ்ய தரப்பில் உறுதியளிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவில், பாலஸ்தீனத்திற்கு ஆதரவாக நடைபெற்று வரும் போராட்டம் குறித்த கேள்விக்கு பதிலளித்த திரு. ரன்தீர் ஜெய்ஸ்வால்,

ஜனநாயக நாட்டில் சட்டம் ஒழுங்கு பராமரிப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, ஆகியவற்றுடன் பேச்சுரிமையும் அவசியம் என்று வலியுறுத்தினார்.

**>>>><<<<**

கடந்த ஆண்டு, லண்டனில் இந்திய தூதரகத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பாக, ஒருவரை தேசிய புலனாய்வு முகமை கைது செய்துள்ளது.

இங்கிலாந்தின் **Hounslow** பகுதியில் வசித்து வரும் அவர், கடந்த ஆண்டு நடைபெற்ற போராட்டத்தின் போது, சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபட்டதாக அவர்மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

**>>>><<<<**

தமிழகத்தில், பிஸ்கட், ஐஸ் கிரீம், வேஃபர் பிஸ்கட் போன்ற உணவுப் பொருட்களுடன், திரவ நைட்ரஜனை நேரடியாக கலந்து விற்பனை செய்யக்கூடாது என்று மாநில உணவு பாதுகாப்புத்துறை தெரிவித்துள்ளது.

அவ்வாறு விற்பனை செய்வோர் மீது, உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய சட்டப்படி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறியுள்ளது.

மேலும், திரவ நைட்ரஜன் ஒரு செயலாக்க உதவியாக, உறைதல் தன்மை பொருட்களான பால் சார்ந்த இனிப்பு வகைகள், ஐஸ் கிரீம் போன்ற உணவுப் பொருட்களில் உறைதல் பணியினை மேற்கொள்ள மட்டுமே உதவுவதாகவும் உணவுப் பாதுகாப்புத்துறை ஆணையர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**>>>><<<<**

பர்கினோ ஃபாஸோவில் கடந்த பிப்ரவரி மாதம் ராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் 223 பேர் கொல்லப்பட்டதாக மனித உரிமைகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

இரண்டு கிராமங்களில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக அந்த அமைப்பு கூறியுள்ளது.

இதையடுத்து, ஐ.நா. மற்றும் ஆப்பிரிக்க யூனியன் உரிய விசாரணை மேற்கொண்டு, தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்க உதவ வேண்டும் என்று மனித உரிமைகள் அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

தீவிரவாதிகள் மீதான தாக்குதலின் போது, பொதுமக்கள் கொல்லப்பட்டதாக அந்த அமைப்பு கூறியுள்ளது.

>>>><<<<

நாட்டின் கிழக்கு மற்றும் தெற்கு பகுதிகளில் அடுத்த 5 நாட்களுக்கு கடும் வெப்பம் நிலவக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

பீகார், ஜார்க்கண்ட், ஆந்திரப்பிரதேசத்தின் கடலோரப்பகுதி, ஏனம், தெலங்கானா, ராயலசீமா, கர்நாடகாவின் உட்பகுதி மற்றும் உத்தரபிரதேசத்தின் கிழக்குப் பகுதிகளில் கடும் வெப்பம் நிலவக்கூடும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

அத்துடன், உத்தரபிரதேசத்தின் மேற்குப் பகுதி மற்றும் கொங்கன் பகுதிகளிலும் வரும் 29ஆம் தேதிவரை கடும் வெப்பம் நிலவக்கூடும் என்று தெரிவித்துள்ளது.

இதற்கிடையே, வடமேற்கு பகுதிகளில் அடுத்த மூன்று நாட்களுக்கு லேசான மழை பெய்யக்கூடும் என்றும் கூறியுள்ளது.

ஹிமாச்சலப்பிரதேசம், உத்ராகண்ட் ஆகிய மாநிலங்களிலும், ஜம்மு காஷ்மீர், லடாக் யூனியன் பிரதேசங்களிலும் அடுத்த இரண்டு நாட்களுக்கு கனமழைக்கு வாய்ப்புள்ளதாக அந்த மையம் தெரிவித்துள்ளது.

பஞ்சாப், ஹரியானா, சண்டிகர், தில்லி, ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்றும் கூறப்பட்டுள்ளது.

அஸ்ஸாம், திரிபுரா, மேகாலயா, கேரளா, தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் கோவாவில் நாளை மறுநாள் வரை கடும் வெப்பம் நிலவக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

>>>><<<<

அமெரிக்காவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் அர்ஜூன் கதே - ஜீவன் நெடுஞ்செழியன் இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதியில் இந்த இணை, 6-3, 7-5 என்ற செட்கணக்கில் அமெரிக்காவின் **Thai Son - Lawson** இணையை வென்றது.

>>>><<<<

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் பெங்களூரு அணி 35 ரன் வித்தியாசத்தில் ஹைதராபாத் அணியை வென்றது.

ஹைதராபாதில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த பெங்களூரு அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 206 ரன் எடுத்தது.

விராட்கோலி 51 ரன்னும், ரஜத் பட்டிதார் 50 ரன்னும் எடுத்தனர்.

207 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய ஹைதராபாத் அணி, 20 ஓவர் முடிவில் 8 விக்கெட் இழப்புக்கு 171 ரன் எடுத்து தோல்வியடைந்தது.

இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் கொல்கத்தா அணி – பஞ்சாப் அணியை எதிர்கொள்கிறது.

கொல்கத்தாவில் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

>>>>END<<<<